Nallur Branch Library

O/L,
5ம், 6ம், 7ம், 8ம், 9ம்
வகுப்புக்கள்
ஆரம்பம்:
7 - 7 - 1986
Bond
Institution
கிளை;
74, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
விலை ரூ. 1/-

A/L Chemistry
Mr. மகாதேவா B.Sc.
(Dip-in-Ed.)
'Organic'
சனி, ஞாயிறு—9.30
ஆரம்பம்: 5.7.1986
Bond
Institution
274/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மலர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆனி மீ 20 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 25 (04 07 1986) UTHAYAN: A [illegible] TAMIL DAILY இதழ் 195

பயங்கரவாதச் தடுப்புச் சட்டத்தோடு

அரசமைப்புச் சட்ட ஆறாவது திருத்தமும் இடை நிறுத்தம்?

ஜனாதிபதி சாதகமாக இருப்பதாக கொழும்பில் கருத்து

கொழும்பு, ஜூலை 4

தமிழர் அமைப்புக்களை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளச் செய்யும் இறுதி முயற்சியாக பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தம் ஆகியவற்றை இடைநிறுத்தஞ் செய்ய அரசாங்கம் முன்வரக்கூடும்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

ஜனாதிபதி அதற்குச் சாதகமான அபிப்பிராயம் உள்ளவராக இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் கருத்துத் தெரிவித்தன.

ஜனாதிபதியின் 'ஆசியுடன்' தமிழகம் சென்று விட்டு திரும்பிய இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு விஜய குமாரணதுங்க முதலில் இக் கோரிக்கைகளை வலியுறுத்தி இருந்தார். அது பற்றிய செய்தி உதயனில் வெளிவந்தது வாசகர்கள் அறிந்ததே.

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பீட்டர் கெனமன், ஐ தொ. கா தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் ஆகியோரும் ஜனாதிபதியைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாதகலில் வள்ளம் மீது துப்பாக்கிச்சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மாதகல் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த வள்ளம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

இதனால் மூன்று பேர் பலியானார்கள் வள்ளமும் சேதமடைந்தது

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

நேற்று முன் தினம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



சூடுபட்ட பூனை அடுப்படிப்பக்கம் போகுமா? பாருங்கோ! தபால் வழி மாற்ற நிலையும் அப்படித்தான்!!

டென்மார்க் செல்வதற்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 4

டிரான்சிட் விசா (Transit visa) இல்லாமல் கொழும்பில் இருந்து பயணிகள் எவரும் விமானமூலம் டென்மார்க்குக்கு அனுப்பப்படமாட்டார்கள்

இப்படியானவர்களை அனுப்பவேண்டாம் என்று புதுடில்லியில் உள்ள டென்மார்க் தூதரகத்தில் இருந்து டெலக்ஸ் செய்தி ஒன்று கொழும்பில் உள்ள பிரயாண ஏஜன்சிகளுக்குக் கிடைத்துள்ளது.

இத்தகவலைக் கொழும்பில் உள்ள பிரயாண ஏஜன்ஸிப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்: (இ-எ)

மாகாண சபை யோசனைகள்

சுதந்திரக் கட்சி எதிர்க்க முடிவு

7ஆம் திகதியின் பின்னரே மகாசங்கத்துடன் சேர்ந்து உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

அரசின் மாகாண சபை யோசனைகளை எதிர்ப்பது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைபீடம் முடிவு செய்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

உத்தேச மாகாண சபைகளுக்கு வழங்கப்படவிருப்பதாகக் கூறப்படும் ஆகக் குறைந்த அதிகாரங்கள் பற்றி ஆராய்ந்த பின்னரே கட்சித் தலைமைப் பீடம் இந்த முடிவை எடுத்து இருப்பதாகத் தெரியவருகின்றது.

மாகாண சபை யோசனைகளையும் அதிகாரங்களையும் ஆராய சுதந்திரக் கட்சி சட்ட நிபுணர் குழு ஒன்றை நியமித்து இருந்தது.

அக்குழுவின் பரிசிலனையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவுள்ள உத்தேச அதிகாரங்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களுக்குரிய அந்தஸ்தைப் பறிக்கக்கூடியதாக அமைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளதாம்.

அதிகாரங்களைக் குறைக்கச் சிபார்சு

ஆகக்குறைந்த அதிகாரங்கள் என்று ஜனாதிபதியால் கூறப்பட்ட இந்த அதிகாரங்களை இன்னும் குறைக்கவேண்டும் என்று கட்சியின் சட்ட நிபுணர் குழு சிபார்சு செய்துள்ளதாம்.

இந்த அடிப்படையில் அரசு சமர்ப்பித்த மாகாண சபை அமைப்பு, உத்தேச அதிகாரங்கள் ஆகியவற்றை எதிர்ப்பது என்று சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்தினர் முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது

அவகாசம் போதாது

இதனிடையில் யோசனைகளை ஆராய்ந்து முடிவு எடுக்க கொடுக்கப்பட்ட காலக்கெடு போதாது என்று, சுதந்திரக் கட்சி கடந்த புதன்கிழமை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது

கட்சியின் அரசியல் குழுக் கூட்ட முடிவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரச அதிபரின் சாரதியை தாக்கிய ஊர்காவல் படைவீரர்

திருகோணமலை, ஜூலை 4

திருகோணமலை அரசாங்க அதிபர் திரு டி. எம். ஆரியரத்தினவின் கார்ச் சாரதி, ஊர்காவல் படை வீரர் ஒருவரினால் நேற்றுக்காலை தாக்கப்பட்டார்.

அரச அதிபரின் காரில் தன்னை ஏற்றிச் செல்லும்படி அந்த ஊர்காவல் படை வீரர், சாரதியை வற்புறுத்தினார். சாரதி மறுக்கவே, சாரதி பலமாகத் தாக்கப்பட்டார்.

ஊர்காவல்படை வீரரின் இச் செயலைச் சாரதி, அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

உடனடியாக பாதுகாப்பு மேலிடத்துக்கு அரச அதிபர் இந்த விஷயத்தை அறிவித்தார்.

இத்தகவலை நேற்றுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இறைவரி திணைக்களம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வரியிறுப்பாளர்களின் பாதுகாப்புக் கருதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒரு பகுதி 44 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வரிசம்பந்தமான விடயங்களுக்கு மேற்படி பகுதியுடன் தொடர்பு கொள்ளமுடியும். (இ)

மன்னாரில் சுடுபட்டோர் அகதிகளாம்

கொழும்பு, ஜூலை 4

மன்னாருக்கு அருகில் படகில் வரும்போது ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 34 பேரும் தமிழ்நாட்டில் இருந்து திரும்பி வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

தபால் அலுவலகத்தை மீண்டும் பழைய இடத்துக்கு மாற்ற உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் தற்பொழுது இயங்கும் யாழ் தபால் அலுவலகத்தை மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றுமாறு கொழும்பு தபால் தலைமை அலுவலகம் யாழ்-தபாலக அதிகாரிகளைப் பணித்துள்ளது.

இதற்கு ஊழியர்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ்-கோட்டை முகாமில் இருந்து நடத்தப்படும் தாக்குதல்கள் காரணமாக யாழ் தபாலகம் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவுக்கு இடம் மாற்றப்பட்டது.

எனினும் இரண்டாம் குறுக்குத்தெரு அலுவலகத்தில் தற்பொழுது தபால் விநியோகிக்கும் வேலை மட்டுமே நடைபெற்று வருகிறது.

இதனை அடுத்தே மீண்டும் பழைய இடத்துக்கு தபால் அலுவலகத்தை மாற்றும்படி கொழும்பில் இருந்து உத்தரவு வந்திருக்கிறதாம். (இ-10)

மாணவன் கொலையைக் கண்டித்து

யாழ் நகரில் நேற்று மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சீருடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து, யாழ் நகரில் உள்ள பாடசாலை உயர்தர மாணவர்கள் மௌன ஊர்வலமொன்றை நேற்று நடத்தினர்.

இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான பொ. நகுலபாஸ்கரன் கடந்த திங்கட்கிழமை கல்லூரி முடிவடைந்து வீடு சென்று கொண்டிருக்கும்போது கோப்பாயில் சுட்டுக்கொல்லப்பட்டதை கண்டித்தே இவ்வூர்வலம் நடத்தப்பட்டது.

மாணவருக்கு பாதுகாப்பு அளியுங்கள் என்ற சுலோகம் ஏந்திய வண்ணம் யாழ் இந்துக் கல்லூரிக்கு முன்னால் இருந்து ஊர்வலம் ஆரம்பமானது.

யாழ் நகரில் உள்ள பல பாடசாலை உயர்தர வகுப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த ஊர்வலம் அரசடி வீதி பருத்தித்துறை

(4ஆம் பக்கம் பார்க்க)

இளம் குருத்துகளின் படுகொலையைத் தடுக்குக

மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

எமது இன இளம் குருத்துக்களைப் படுகொலை செய்வதிலிருந்து பாதுகாப்பு அளித்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பதோடு இனியும் இத்தகைய அவலங்கள் எமது மாணவ சமுதாயத்திற்கு ஏற்படாதவண்ணம் ஏற்ற நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற மௌன ஊர்வலத்தின் இறுதியில் 'யாழ் இந்து மாணவன் பொ. நகுலபாஸ்கரன் கொலை' என்ற தலைப்பில் கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

30-6-86ஆம்திகதி இல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஷெல் தாக்குதல் வழமை நிகழ்ச்சி ஆகிவிட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்கடற்கரை வீதியை நோக்கி தினமும் ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் வேறிடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்றும் கடற்கரை வீதி கொட்டடிப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. (இ-10)

அ'புரத்துக்கு மேலதிக பஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 4

எதிர்வரும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் இருந்து அனுராதபுரத்துக்கு மேலதிக பஸ் சேவை ஒன்று நடத்தப்படும்.

வழமையாகத் தினமும் நடத்தப்படும் சேவையுடன் இது மேலதிகமாக நடத்தப்படும்.

காலை 5.30க்கு கோண்டாவில் டிப்போவில் இருந்து புறப்படும் இந்த பஸ், யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 5.45க்கு புறப்படும். (இ-எ)

தொண்டா தமிழ் நாடு செல்கிறார்

கொழும்பு, ஜூலை 4

அமைச்சர் தொண்டமான் நாளை சனிக்கிழமை தமிழகம் செல்கிறார்.

பேரனின் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்லும் இவர் சென்னையில் உள்ள தமிழ்க் குழுக்களுடன் பேச்சுக்களை நடத்துவார். (இ-எ-2)

பலாலிப் பகுதியில் சுற்றும் புதிய ரக விமானங்களும் ஹெலிகளும்

யாழ்ப்பாணம், ஜூலை 4

புதிய ரக சிவப்பு, கறுப்பு நிறங்களை உடைய விமானங்களும் நீலம், பச்சை, மஞ்சள், கறுப்பு நிறங்களை உடைய ஹெலிகொப்டர்களும் பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இப்பகுதியை அண்டியுள்ள ஏராளமான பொதுமக்கள் தினமும் தங்களது இருப்பிடங்களையும், தோட்டங்களையும் விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

காலை வேளைகளில் பலாலி முகாமில் இருந்து மேலெழும் இந்த விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும், வயாவிளான், கீரிமலை, தொண்டமானாறு முகாம் பகுதிகளைச் சுற்றி வளைந்து பறந்து திரிகின்றன.

இடையிடையே ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்படுகின்றது.

கப்பல்கள், விமானங்கள் மூலம் மேலதிகச் சிப்பாய்களும் வட பகுதி இராணுவ முகாம்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது (இ-10)

சுபநேரம்

04—07—1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
5 57 முதல் 7.27 வரை
ராகுகாலம்:-
10.27 முதல் 11.57 வரை
[illegible]
பிரதோஷ விரதம்

மாகாணசபை யோசனை:

யுத்த நிறுத்தம் தேவை என்கின்றனர் தொண்டா, பீட்டர்

கொழும்பு, ஜூலை 4

தமிழ்க் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு முன்னோடியாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தம் ஆகியவற்றை இடை நிறுத்தம் செய்ய வேண்டும்; யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்

இப்படி அமைச்சர் தொண்டமானும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமனும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை வற்புறுத்தினர்.

மாகாணசபை யோசனைகள் சம்பந்தமாக கடந்த புதன்கிழமை ஜனாதிபதியை இரண்டு தலைவர்களும் தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

அப்போதே இக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

நேற்று (வியாழன்) மாலை ஜனாதிபதியைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

குமார் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 4

மாகாணசபை யோசனைகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்து இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியிடம் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்.

புதன்கிழமை நடந்த சந்திப்பின்போது திரு குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னதாவது:

சில யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. சில யோசனைகள் போதாமல் உள்ளன. சில யோசனைகள் முற்றாகத் திருப்தி அளிக்கவில்லை

காணி அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் தமிழரின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தா.

மாகாண ஆளுநர் முறையையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படி திரு. குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னார்,

[illegible] நீதிமன்றம், கல்வி, கைத்தொழில், தொழில் வாய்ப்பு சம்பந்தமான அதிகாரங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வாசுதேவாவும் இந்தியா செல்கிறார்

கொழும்பு, ஜூலை 4

பம்பாயில் நடைபெறும் தொழிற் சங்க மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக நவ சமசமாஜக் கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார ஜூலை 6 இல் இந்தியா செல்கிறார்

பின்னர் சென்னையில் தமிழர் குழுக்களையும் சந்திப்பார்,

இது சம்பந்தமான செய்தியாளர் மாநாடு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறுகிறது (இ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பிறப்பு சான்றிதழ்கள் செயலகத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் அரச செயலகத்தில் பிறப்பு இறப்பு, திருமண சான்றிதழ்கள் உரியவர்களிடம் சேராமல் குவிந்து கிடக்கின்றன

விண்ணப்பித்தவர்களுக்கு அனுப்பிய பத்திரங்களில் பல திரும்பி செயலகத்துக்கே வந்துள்ளன.

பாதுகாப்பு படைகளின் நடவடிக்கைகளினால் சொந்த இடங்களைவிட்டு இடம் பெயர்ந்தவர்களின் அத்தாட்சிப் பத்திரங்களே இவையாகும்.

இவற்றுக்குரியவர்கள் தங்கள் புதிய விலாசத்தை அறிவித்தோ, அல்லது நேரில் செயலகத்துக்கு வந்தோ, மேற்படி பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு மேலதிக மாவட்ட பதிவாளர் திரு இ. இராசையா தெரிவித்துள்ளார். (உ-5)

அல்வாய் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அல்வாய் ஸ்ரீவேவிலந்தை முத்துமாரி அம்சாள் வருடாந்த மகோற்சவம் 7.7.86 இல் கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த்திருவிழா ஜூலை 20 இலும் தீர்த்தோற்சவமும் ஜூலை 21 இலும் இடம்பெறும். (இ-ஈ)

ஆலய உற்சவங்கள்

வட்டுக்கோட்டை, ஜூலை 4

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது:

இம்மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு பஞ்சரதம் பவனி வருதலும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடேசர் அபிஷேகம் ஆரம்பமாகி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

வைரவர்மடை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் (இ-161)

*

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவளநாத சிவன்கோவில் வருடாந்த மகோற்சவங்கள் இன்று 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

12 ஆம் 13 ஆம் திகதிகளில் நடைபெறும் தேர், தீர்த்த உற்சவங்களுடனும் 14 ஆம் திகதி இரவு இடம்பெறும் திருக்கல்யாண விழாவுடனும் உற்சவங்கள் நிறைவுறும். (இ-31)

யாழ் இந்து மாணவனின் இறுதி ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

கோப்பாய் பாலத்தடியில் வைத்து அரச படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனும் ரெலோ வாலிபச் செயலாளருமான பொன் நகுலபாஸ்கரனின் மரணச் சடங்குகள் புதன்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றன.

பெருந் தொகையான பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

காலை 10 மணிக்கு மீசாலை தெற்கில் உள்ள அவரது வீட்டு வாசலில வைத்து பூதவுடல் ரெலோ அமைப்பினால் கையேற்கப்பட்டது.

பின்பு ஊர்வலம் மீசாலை கிராம வீதியூடாக வீரசிங்கம் மகாவித்தியாலயத்தை வந்தடைந்தது.

அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில ரெலோ மாவட்டச் செயலாளர் உரை நிகழ்த்தினார்

பூதவுடல் கொண்டு செல்லப்பட்ட வாகனத்துக்கு முன்னே சீருடை தரித்த ரெலோ உறுப்பினர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

சுமார் 5 மைல் தூர ஊர்வலம் பாதை நெடுக கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

தமிழீழ மாணவர் பேரவையின் (ரெலோ) இறுதி மரியாதையுடன் சிதைக்கு தீவைக்கப்பட்டது

ரெலோ அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் மாவட்டப் பாடசாலைகள் புதன்கிழமை நண்பகலுடன் மூடப்பட்டன. (இ-உ)

வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 4

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய என்றாவது ஒருநாள்? என்ற குறுநாவலின் வெளியீட்டு விழா நல்லூர், இந்து விடுதியில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நடைபெறும்.

கலாநிதி சபா. ஜெயராசா அவர்களின் தலைமையில் நடைபெறும் விழாவில் திரு டொமினிக் ஜீவா சிறப்புரை நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை பேராசிரியர் அ சண்முகதாஸ் அவர்களும் ஆய்வுரையை பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களும் வழங்குவார்கள். (உ)

பிரயாண ஒழுங்குகள்

✱ கனடா
✱ ஜேர்மன்
✱ பிரான்ஸ்
✱ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட் (BOND), ரிக்கட்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

டென்மார்க் – கனடா
ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியூ.
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

கிளிநொச்சி கச்சேரி இடம் மாற்றம்

இணைப்பதிகாரியின் சம்மதம் வேண்டுமாம்

கிளிநொச்சி ஜூலை 4

கிளிநொச்சி அசம்பாவிதங்களினால் செயல் இழந்துள்ள கிளிநொச்சி மாவட்டக் கச்சேரி, உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியவை பிற வேறு இடங்களில் தற்காலிகமாக மாற்றுவதற்கு அமைச்சு இணங்கியுள்ள போதும் இதற்கு கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியின் சம்மதம் பெற வேண்டுமென தலைமைப்பீடம் கூறியுள்ளதாகத் தெரிகிறது

கொழும்பு சென்றுள்ள கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியின் வருகையை மேற்படி அலுவலகங்கள் எதிர்பார்த்த வண்ணம் உள்ளன

இதேவேளை கிளிநொச்சி தபால் நிலையம் பரந்தன் தபால் நிலைய மேல் மாடிக் கட்டடத்திற்கு இம்மாற்றப்பட்டுச் செயல்பட ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டக் கல்விக் கந்தோர் பளை மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது

இவ்வாறு ஏனைய அலுவலகங்களையும் இடம் மாற்றுவதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை மக்களின் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றான கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலை பூரணமாக இயங்க முடியாத நிலையில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. (இ 76)

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் திருட்டு

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் மருந்து வகைகளும் இனம் தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுள் மேற்படி வைத்தியசாலையில் இடம்பெற்ற இத்திருட்டுத் தொடர்பாக யாழ் சுகாதார பிராந்தியப் பணிப்பாளருக்கு முறையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராணுவ முகாமின் ஓர் எல்லையாக விளங்கும் இவ்வைத்தியசாலை கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் வரவு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

தற்போது கிளிநொச்சியில் இடம் பெற்றுள்ள அசம்பாவிதத்தினால் இவ்வைத்தியசாலை முழு அளவில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

பொது மக்களோ ஊழியர், உத்தியோகத்தர்களோ இன்றி இராணுவ முகாமுக்கு அருகில் வெறிச்சோடிக் கிடக்கும் இவ்வைத்தியசாலையில் இடம் பெற்ற இத்திருட்டு தொடர்பாக இப்பகுதி மக்கள் கவலை கொண்டுள்ளனர்

இதேபோல் கிளிநொச்சி மகாவித்தியாலய விஞ்ஞான விவசாய கூடங்களிலும் நீர்பாசன இலாகா விடுதிகள் சிலவற்றிலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ 76)

காணவில்லை

30-06 86 (திங்கள்) பிற்பகல் கொடிகாமம் ஊடாக யாழ் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் க. பொ. த சான்றிதழ்களுடன் பல குறிப்புக்களும் சாறி வேறு சில பொருட்களும் அடங்கிய பாக் ஒன்று காணாமல் போய்விட்டது மற்றைய பொருளைப் பற்றி அவசியம் இல்லாவிட்டாலும் சான்றிதழ்களையாவது தந்துதவும் வண்ணம் மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி எஸ் பி சாமி அன் கொம்பனி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் அல்லது க பரமானந்தம், மின்சார நிலைய வீதி, 3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பருத்தித்துறையில் வயிற்றோட்ட நோய்

தாளையடி ஜூலை 4

பருத்தித்துறை கிழக்கில் உள்ள கிராமங்களில் குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் வேகமாக பரவி வருகிறது.

தாளையடி, உடுத்துறை, மருதங்கேணி ஆழியவளை ஆகிய கிராமங்களில் உள்ள அனேக குழந்தைகள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் வற்றி வருவதையடுத்தே இந்நோய் தீவிரமாக பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (144)

முரசுமோட்டை அகதிகளுக்கு உதவி

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு முரசுமோட்டைப் பகுதியில் தஞ்சமடைந்த அகதிகளுக்கு பொதுஸ்தாபனங்கள் பல தாமாகவே முன் வந்து உதவி வழங்கின

இதுகுறித்து அகதிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

முரசுமோட்டை தென் இந்திய திருச்சபை. முரசுமோட்டை அத்தியாவசிய சேவைகள் கிளைக் குழு, கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் மத்திய குழு ஆகியனவே உணவு வழங்கிய பொது ஸ்தாபனங்களாகும்.

இதேவேளை கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்த அகதிகள் இராமநாதபுரம் கொலனி அதிபர் விடுதி, அலுவலகம் ஆகியவற்றுக்கு இடம்மாற்றப்பட்டுள்ளனர்

இதனைத் தொடர்ந்து வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-76)

காயமடைந்த சிப்பாய்களை

சிறிமா பார்த்தார்

கொழும்பு, ஜூலை 4

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளில் காயமடைந்த இராணுவ சிப்பாய்களை கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்குச் சென்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பார்வையிட்டார்.

சிப்பாய்களுக்கு திருமதி பண்டாரநாயக்கா ஆறுதலும் கூறினார்.

பரிசுப் பொருள்களையும் அவர் வழங்கினார்.

இராணுவத் தளபதி நளின் செனவிரத்னவும் கூட சென்றிருந்தார். (இ-எ-2)

பல வித ஆற்றல்களை உடற்பயிற்சி வளர்க்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 4

உடற்பயிற்சி, உடலையும் உள்ளத்தையும் உறுதிப்படுத்தி பல விதஆற்றல்களை வளர்க்கிறது.

தேசிய உதைபந்தாட்டப்பயிற்சியாளரும் சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தருமான திரு. ஏ. எஸ் குணரத்தினம் இவ்வாறு கூறினார்.

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை மாணவர் மன்றக் கூட்டத்தில் "உடற்பயிற்சியால் ஏற்படும் நன்மைகள்" என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார்.

அதிபர் திருமதி. பா. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு குணரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது!

மாணவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத்தருவது விளையாட்[illegible] கட்டுப்பாடு ஒழுங்கைக் கற்றுக் கொடுப்பதோடு விட்டுக்கொடுக்கும் மனோபாவத்தையும் விளையாட்டுக்கள் கற்பிக்கின்றது.

விளையாட்டுக்கள் புதிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டிவிடுகின்றன.

பலவித தடைகளை நம்பிக்கையுடன் சலிப்படையாது தாண்ட வைப்பதும் விளையாட்டுக்களே.

இப்படி அவர் கூறினார்.

அதிபர் தமது உரையில் பாடசாலைக்கென தனியான விளையாட்டு மைதானம் இல்லாதிருந்த போதிலும் பெற்றோரும் நலன் விரும்பிகளும் ஆசிரியர்களும் மாணவர்களும் இத்துறையில் காட்டிவரும் ஆர்வம் அக்கறை காரணமாகவே இப்பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகளை சிறப்பாக நடத்த முடிகின்றது எனக் கூறினார்.

ஆசிரியர் திரு. க கணேசலிங்கம் நன்றி கூறினார். (இ)

யாழ். மாவட்டக் கிறிஸ்தவக் கலை கலாசார உப குழு நடத்தும்

"நாட்டார் பாடல் போட்டி"

நற்செய்தியை ஆதாரமாகக்கொண்டு பின்வரும் தலைப்புக்களில் பாடல்கள் அமைய வேண்டும்

(1) மேழிச்செல்வம் (அரிவு வெட்டும் பின்னணியில்)
மத்தேயு. அதிகாரம். 13. வசனம் 4—24

(2) நீலக் கடலில் (மீன்பாடு பின்னணியில்)
மத்தேயு, அதிகாரம். 14 வசனம் 22—33

(3) இழவில் அழுதிடும் பெண்கூட
(ஒப்பாரிப் பின்னணியில்)
அருளப்பர், அதிகாரம். 11. வசனம். 1—44

ஒவ்வொரு தலைப்புக்கும் 3 பரிசில்கள் வழங்கப்படும்.
ஒருவர் எத்தனை பிரதிகளையும் அனுப்பலாம்.

தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் வெவ்வேறு பங்குகளில் உள்ள நாடக, நடனக் குழுவினால் மேடையேற்றப்படும்.

நிபந்தனை: பாடல் 20 நிமிட நேரம் பாடக்கூடிய அளவில் எழுதப்பட்டு, யூலை 30ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக,

வண. பிதா பிரான்சிஸ் ஜோசெப்.
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
மேலதிக விபரங்கள் தேவைப்படின் வண. பிதாவுடன் தொடர்புகொள்க.

வை மு. பஞ்சலிங்கம்
யாழ் மாவட்ட செயல[illegible]

31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரா ரான்ஸ்போட் கம்பனி ஊழியர்

செல்லையா கௌதமராஜா

தோற்றம்:
30-8-1954

மறைவு:
04-06-1986

திதி: 4—07—1986

வடமாகாண மக்களின் உணவு முத்திரைகளுடன் வந்து கிளிநொச்சியில் அரசுகாரர்களிடம் இருந்து கூடவந்தவர்களைப் பாதுகாத்து தன்னுயிரை நீத்த எங்கள் கம்பனி ஊழியர் செ. கௌதமராஜாவை அன்புடன் நினைவுகூருகின்றோம்.

எம் வாழ்வை உயரவைக்க அயராது உழைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எங்கள் உயிர் உள்ளவரை ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

4-7-86 வெள்ளிக்கிழமை (இன்று) காங்கேசன்துறையில் நடைபெறும் அந்தியேட்டியிலும் அதன்பின் துறைமுக நுழைவாயிலில் வீற்றிருக்கும் அரிஹர புத்திர ஐயனார் கோயிலில் நடைபெறும் அன்னதான வைபவத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரா ரான்ஸ்போட்
நிறுவனத்தினர்,
ஊழியர்கள்.

ஸ்ரீ ஐயனார் ஸ்ரேர்ஸ்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு.

உதய சங்கற்பம்

காலைத் தூக்கம் வறுமையை ஏற்படுத்தும்
—நபி(ஸல்)

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், 04-07-86
தொலைபேசி 24805
22073
த பெ 23

மாகாண சபைகளில் விவசாயமும் கைத்தொழிலும்

மாகாண சபை யோசனைகளில் விவசாயம், கைத்தொழில் சம்பந்தமாக வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் சற்று ஊன்றிக் கவனிப்பது நல்லது

விவசாயத்துறையில் பின்வரும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

1. மாவட்ட விவசாய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறையாக்குதல்
2. விவசாய விஸ்தரிப்பு வேலைகளைச் செய்தல்.
3. விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்குதல், விவசாயக் காணிகள் இடாப்புத் தயாரித்தல் ஆகிய சில்லறை வேலைகளைச் செய்தல்
4. சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனருத்தாரணம் செய்து பராமரித்தல்.

இந்த நான்கு அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு ஒரு மாகாணத்தில் விவசாயத்தை விருத்தி செய்ய முடியுமா? அந்த மாகாணத்தின் உணவுச் சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா?

மாகாணத்தில் உள்ள பெரிய குளங்களை நிர்வகித்துப் பராமரிக்கும் பொறுப்புக் கூட உத்தேச மாகாண சபைகளுக்கு இல்லை

ஆறுகள், பெரிய நீர்நிலைகள் எல்லாம் மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன

அந்தந்த மாகாணத்தில் உள்ள இயற்கை வளங்கள் முதலில் அந்தப் பகுதி மக்களுக்குத் தான் சொந்தமாக வேண்டும் அதற்கு அடுத்துத் தான் அது தேசியச் சொத்து என்று கொள்ளப்பட வேண்டும்

ஆனால் மாகாண சபை யோசனைகளின் பிரகாரம் வளம் நிறைந்த இயற்கைச் சொத்து எல்லாம் மத்திய அரசுக்குச் சொந்தம் என்ற நிலைப்பாடு கடைப்பிடிக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

தங்கள் பகுதியில் உள்ள ஓர் இயற்கை வளத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று தீர்மானிக்கும் அதிகாரம் அந்தப்பகுதி மக்களுக்கு இல்லையெனில் அதிகாரப்பரவல் என்பதன் உண்மை நிலை என்ன?

கிராம மட்டத்தில் அதிகாரத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்கிறோம்; கிராம ராஜ்யங்கள் உருவாக்கப் போகிறோம் என்று வெறுமனே வாய்ப்பந்தல் போட்டால், அதனால் மக்களுக்கு என்ன பயன்?

ஒரு மாகாணத்தின் பிரதேசத்திற்குள் விளையும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு அடிமட்ட விலை நிர்ணயிக்கும் முக்கிய பொறுப்பையும் மத்திய அரசே சுவீகரம் செய்து வைத்திருக்கிறது.

அது பெரும் சதி என்றே நாம் கருதுகிறோம். ஒரு மாகாணத்தில் அதிகம் உற்பத்தியாகும் பொருள்களின் விலைகளை மத்திய அரசு கட்டுப்படுத்தி வைத்திருக்க அது வழி செய்யும். அது மட்டுமன்றி, அமோக விளைச்சல் உள்ள காலத்தில், மத்திய அரசு நினைத்தால் வெளிநாட்டிலிருந்து அதே பொருளை இறக்குமதி செய்து ஏனைய மாகாணங்களில் குறைந்த விலைக்கு விற்க அது வகை செய்யவும் வாய்ப்பு உண்டு

அதாவது—

மத்திய அரசு விரும்பினால் ஒருமாகாணத்தில் வாழும் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய அதிக வருமானத்தை, இலாபத்தைக் கட்டுப்படுத்தலாம். சம்பந்தப்பட்ட மாகாணத்தின் பொருளாதாரத்தை அது பாதிக்கும்.

ஒரு மாகாணத்தின் மீது மத்திய அரசு வஞ்சம் தீர்க்க நினைத்தால் விளைபொருள்களின் விலையை வேண்டுமென்றே குறைத்துத் தனது விருப்பத்தை நிறைவேற்றவும் வாய்ப்பு உண்டு.

விலை விவகாரத்தில் நாணயக்கயிற்றை மத்திய அரசு வைத்திருந்தால் மாகாணங்கள் எவ்வாறு விவசாய விருத்தி காண்பது?

கைத்தொழிலை எடுத்துக் கொண்டால் அந்தத் துறையையும் மாகாண மட்டத்தில் விருத்தி செய்யப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை

மாகாணங்களில் கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் விருத்தி செய்யவும் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் கைத்தொழில்களைப் பதிவு செய்து அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத் தான் இருக்குமாம்.

இங்கும் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் விலை நிர்ணயக் கொள்கையை மத்திய அரசாங்கமே வகுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்குப் பெயர் தானா அதிகாரப் பரவலாக்கல்?

மேலும் இப்போது மாகாணங்களில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான கைத்தொழில்கள் தொடர்ந்தும் மத்திய அரசின் நிர்வாகத்திலும், கட்டுப்பாட்டிலுமே இருக்குமாம்.

உதாரணமாக வடக்கில் உள்ள சிமெந்து, இரசாயனத் தொழிற்சாலைகளையும் கிழக்கில் உள்ள காகிதத் தொழிற்சாலையையும், மேற்கில் உள்ள பெற்றோலியம் தொழிற்சாலையையும், தெற்கில் உள்ள ஹோட்டல் கூட்டுத்தாபனக் ஹோட்டல்களையும் நிர்வகிக்கும் தகுதி அந்தந்த மாகாண மக்களுக்கு இல்லையா?

அவை ஏற்கனவே தேசிய ரீதியில் நிறுவப்பட்டாலும் அதிகாரங்கள் பரவலாக்கப்படும் போது, மாகாண நிர்வாகத்திடம் ஒப்படைக்க விருப்பமில்லையா அல்லது நம்பிக்கையில்லையா?

அவ்வாறாயின் எவ்வாறு பரவல் என்று சொல்வது எதனை?

உலக வங்கி வட்டி குறைப்பு

ஜெனீவா, ஜூலை 3

வளரும் நாடுகளுக்கு வழங்கப்படும் கடன் மீதான வட்டித்தொகை உலக வங்கியால் குறைக்கப்பட்டுள்ளது

புதிய வட்டி வீதம் 8·23 ஆக இருக்கும்.

1982 ஆம் ஆண்டு முதல் உலக வங்கி வளரும் நாடுகளுக்கான வட்டி வீதத்தைக் குறைத்து வருகின்றது. (இ-ஓ)

சுகவீனமுற்றிருக்கும் ஜெகஜீவன்ராம் சிகிச்சைக்கு லண்டன் செல்வார்

லண்டன், ஜூலை 3

காங்கிரஸ் (ஜெ) கட்சியின் தலைவரான திரு ஜகஜீவன்ராம் மருத்துவ சிகிச்சைக்காக லண்டனுக்கு அழைத்துச்செல்லப்படவிருக்கிறார்.

மேமாத முற்பகுதியில் டில்லியில் உள்ள பிரபல தனியார் வைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட ஜகஜீவன்ராமின் உடல்நிலை நேற்று மாலை திடீரென பாதிப்படைந்தது

நியூமோனியா காய்ச்சலுக்கான அறிகுறியுடன் மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்பட்டிருந்தது (இ-ஓ)

வெளி உலகில்

இலங்கையில் தமிழரைக் கொல்லும் ஆயுதங்கள்

பஹ்ரைன் செய்தியாளர் கூற்று

பாஹ்ரெய்ன், ஜூலை 3

அரேபியரைக் கொல்லும் இஸ்ரவேல் ஆயுதங்கள் தான் இலங்கையில் இந்திய வம்சாவளித் தமிழரையும் கொல்கின்றன.

இதை அரேபியர்கள் மத்தியில் உணர வைக்கும் பிரசாரவேலைகளை இந்தியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இப்படி பாஹ்ரைன் நாட்டில் உள்ள 'இந்து' செய்தியாளர் எப் ஜே ஹெம்ரபாலா அனுப்பிய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இஸ்ரவேல் ஆயுதங்களைப் பெறுவதில் இலங்கை ஈடுபட்டிருப்பதை அரபு நாடுகள் சரியாக உணர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது

ஆனால் இஸ்ரவேலின் இலங்கைக்கான இராணுவ உதவி அரபு நாடுகளில் அவ்வளவாக உணரப்படவில்லை.

இதை உணர்த்தக் கூடிய அதிகாரபூர்வமான நடவடிக்கைகளை இந்தியா எடுக்கவேண்டும்

—இப்படி அச்செய்தி மேலும் கூறுகிறது (உ-எ-2)

சீக்கியருக்குப் பிணை

இஸ்லாமாபாத், ஜூலை 3

பாகிஸ்தானில் வைத்து இந்தியத் தூதரக அதிகாரிகளைத் தாக்கியதாகவும் கொலைப் பயமுறுத்தல் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஆறு சீக்கிய தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் அரசு பிணை அனுமதித்துள்ளது.

ஒவ்வொருவரும் 0 000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-ஓ)

இரகசிய நோக்கம் இல்லையாம்

வாஷிங்டன், ஜூலை 3

அமெரிக்க விஜயத்தில் இரகசிய நோக்கம் எதுவும் இல்லை.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி நியூயோர்க்கில் வைத்துச் சொன்னார்.

கனடா, லண்டன், சென்ற பின்னர் தான் நான் கொழும்பு திரும்புவேன் என்றும் அமைச்சர் சொன்னார் (உ-எ-2

சர்வதேச விதிகளை மீறுகிறது

அமெரிக்கா மீது ரஷ்யா குற்றச்சாட்டு

நியூயோர்க், ஜூலை 3

நிக்கரகுவாவில் தலையிடுவது மூலம் அமெரிக்கா சர்வதேச விதிகளை மீறுகிறது

ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யத் தூதர் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பேசும்பொழுது இக்குற்றச்சாட்டைச் சுமத்தினர்.

நிக்கரகுவாவுக்கு அமெரிக்கா சவால்விடுத்திருப்பது பலமாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும் என்றும் ரஷ்யத் தூதுவர் கூறினார்

நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்குஅமெரிக்கா உதவுவதுபற்றியமுடிவை எதிர்த்து நிக்கரகுவா தாக்கல் செய்த புகார் பற்றிய பாதுகாப்புச் சபையில் நடைபெற்ற விவாதத்தில், பல நாடுகளும் ரஷ்யாவின் கருத்தையே ஆதரித்துப் பேசினர். (இ-ஓ)

சிதம்பரம் பெயரில்---

சென்னை, ஜூலை 3

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பெயரில் புதிதாக திருநெல்வேலி மாவட்டம் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது.

வ. உ.சியின் பிறந்த நாளான செப்டம்பர் 5 ஆம் திகதி முதல் செயல்படவுள்ள இந்த மாவட்டத்தின் முக்கிய பட்டினமாக தூத்துக்குடி விளங்கும்.

தென்ஆற்காடு மாவட்டம் விரைவில் வள்ளலார் மாவட்டமாக பெயர்பெறும். (இ-ஓ)

போயிங்-747

வாஷிங்டன், ஜூலை 3

"போயிங் 747" விமானங்கள் மீது கவனமான பரிசோதனை மேற்கொள்ளுமாறு அமெரிக்க விமான போக்குவரத்துக் கழகம் சகல நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதே ரகத்தைச் சார்ந்த பல விமானங்களின் முன் பக்கத்தில் சிறியவெடிப்புகளை அவதானித்த பின்னரே இந்த அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஓ)

மாகாணசபையின் உத்தேச அதிகாரங்கள்

நீர்ப்பாசனம், காணி அபிவிருத்தி

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாரித்த புதிய யோசனைகள் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்த யோசனைகளின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்ந்து உதயனில் பிரசுரமாகின்றன.

இன்று ஐந்தாம் பகுதி வெளியிடப்படுகிறது

2. மாகாணங்களுக்கு இடையேயான நீர்ப்பாசன, காணி அபிவிருத்தித் திட்டங்கள்

2:1 இத்திட்டங்களை (உதாரணம்: மகாவலி அபிவிருத்தித் திட்டம்) செயற்படுத்தும் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு.

2:2 இத்திட்டங்களின் கீழ் வரும் விவசாய குடியிருப்புக்காணி அளவு சம்பந்தமான கொள்கை, நிபந்தனைகளை மாகாண சபைகளைக் கலந்தாலோசித்து இலங்கை அரசு தீர்மானிக்கும்.

2:3 இத்திட்டங்களின் கீழ் குடியமர்த்தப்படுவதற்கு ஆட்கள் தெரிவு செய்யப்படுவது பற்றிய நிபந்தனைகளையும் மத்திய அரசே தீர்மானிக்கும்.

ஆனால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வது, அது தொடர்பான வேறு செயற்பாடுகள் மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டவை.

2:4 இத்திட்டங்களின் கீழ்வரும் காணிகளின் உபயோகம் பற்றிய கொள்கைத் திட்டத்தைத் தேசியக்காணி ஆணைக்குழுவே வகுக்கும்.

இந்தக் கொள்கைகள் தொழில் நுட்ப அடிப்படையில் தான் வகுக்கப்படும்; அரசியல், இன ரீதியில் இவை வகுக்கப்படமாட்டா.

சூழல், பொருளாதார மற்றும் தொடர்பான காரணிகளின் அடிப்படையில் பொது [illegible] கொள்கைத் திட்டத்தைத்தான் ஆணை[illegible] வகுக்கும்.

2.5; வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செயற்படுத்தும்போது ஆணைக்குழுவால் வகுக்கப்பட்ட தேசியக்கொள்கை குறித்து மாகாண சபைகள் கட்டாயமாக கவனிக்க வேண்டும்.

மகாவலித் திட்டத்தின் கீழ் புதிய காணிப் பங்கீடு ஒதுக்கப்படுதல்:

1. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 'ஏ' பிரிவில் இருந்து 'எச்' வரை இருக்கும் புதிய காணித் துண்டுகளின் மொத்தத் தொகை வருமாறு;

ஏ—14, 300
பி—37, 483
சி 22, 000
டி—14, 800
ஈ— இல்லை
எப்— இல்லை
ஜி— 2 900
எச்— 10, 000

101,483

2. இக்காணித்துண்டுகளில் தேசிய இன விகிதாசார அடிப்படையில் இலங்கைத் தமிழர், முஸ்லிம், இந்தியத் தமிழருக்குரிய தொகை

இலங்கைத் தமிழர்:	12,787
இலங்கை முஸ்லிம்:	7,509
இந்தியத் தமிழர்:	5,683
காணித்துண்டுகள்:	25,979

குறிப்பு: தேசிய இன விகிதாசாரப்படி சிங்களவருக்கு 75, 504 காணித் துண்டுகள் வழங்கப்படும்

3. இக்காணிகள் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படும்.

இதுவரை 882 காணித்துண்டுகள் தமிழருக்கும் 1, 481 துண்டுகள் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

விவரம் வருமாறு;

'ஏ' பிரிவு	தமிழர்:47	முஸ்லிம்: 822
'பி' பிரிவு	தமிழர்:14	முஸ்லிம்: 91
'சி' பிரிவு	தமிழர்: 821	முஸ்லிம்: 568
மொத்தம்		2.363.

4. தமிழ் பேசும் மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 25, 979 காணிகளில் வழங்கப்பட்ட 2, 363 காணிகள் கழிக்கப்படும்.

திருமலை மாவட்டத்[illegible] 700 காணித்துண்டுகளும் [illegible] மாவட்டத்தில் சுமார் 18 690 காணித்துண்டுகளும் உள்ளன என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது

தமிழ் பேசும் மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 25, 979 காணித்துண்டுகள் போக மிகுதியான காணித்துண்டுகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்படும்

குறிப்பு: மகாவலித் திட்டத்தின் கீழ் வரும் ஏனைய பிரிவுகளில் உள்ள காணிகளின் விவரம் காணி சம்பந்தமான ஆய்வுகள் முடிவுற்ற பின்னர் தான் தெரிய வரும்.

5. மகாவலித் திட்டத்தின் ஏ. பி. டி பிரிவுகளில் காணிப்பங்கீடு நடத்தப்படும் போது 1981 இல் இருந்த சனத்தொகையில் காணப்படும் இன விகிதாசாரத்தை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் கொள்கை. எனினும் இந்த மாவட்டங்களில் உள்ள இந்தியத் தமிழரின் விகிதாசாரத்துக்கு இணங்க சில மாறுதலைத் தடுப்பது முடியாத காரியம்.

காரணம் இந்தியத் தமிழருக்குரிய தேசிய விதத்துக்குரிய காணி முழுவதும் இம்மாவட்டங்களில் தான் வழங்கப்பட்டாக வேண்டியுள்ளது.

அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்களும் பொறுப்புகளும்

1. எல்லா விஷயங்களுக்கும் தேசியக் கொள்கை ஒன்றைத் தனித்தனியாக வகுப்பது.
2. பாதுகாப்பு
3. உள்நாட்டுப்பாதுகாப்பு.
4. மாகாண, மாவட்ட சபைகளுக்கு வழங்கப்படாத சட்டம்-ஒழுங்கு, குற்றச் செயல்களைத் தடுப்பது, கண்டுபிடிப்பது முதலிய அதிகாரங்கள்
5. வெளிநாட்டு விவகாரம்
6. தபால், தந்தித் தொலைத் தொடர்பு.
7. நீதிபரிபாலன, நீதிமன்ற நடவடிக்கைகள்.
8. தேசிய வருமானம், நாணயக் கொள்கை, வெளிநாட்டு வளங்கள் சம்பந்தமான நிதித் துறை அலுவல்கள்.
9. வெளிநாட்டு வர்த்தக
10. துறைமுகங்கள்
11. விமான சேவை, விமான நிலையங்கள்
12. தேசியப் போக்குவரத்து
13. ஆறுகளும் நீர்ப்பாதைகளும்
14. இயற்கைக் கனி வளங்கள்
15. ஒலிபரப்பு
16. ஒளிபரப்பு
17. குடியகல்வு, குடிவரவு பிரசாவுரிமை
18. சுங்கத்திணைக்களம்
19. தேர்தல்கள்: ஜனாதிபதி, நாடாளுமன்றம், நடுத்தர அடிமட்ட நிறுவனங்கள்
20. கப்பற் போக்குவரத்து
21. பொருளாதார வலயம், தேசிய கடல் பரப்பு
22. புள்ளி விபர—சனத்தொகைக் கணக்கெடுப்பு
23. தொழில் ரீதியான பயிற்சி
24. மாகாண சபைகளுக்கு வழங்கப்படாத ஏனைய விஷயங்கள்
25. மாவட்ட, மாகாணங்களுக்கு இடையேயான வர்த்தகம்.
26. மாவட்ட, மாகாணசபைகளுக்கு வழங்கப்படுவதைத் தவிர்ந்த அரசகாணி, கடல்சார்ந்த காணி பற்றிய அதிகாரங்கள்
27. தேசியச் சுவடித் திணைக்களம்.

(தொடரும்)

அதிகார பரவலாக்கல்

100 ஆண்டுகளாக சொல்லப்பட்டு வந்த ஒரு விடயம் - ஜனாதிபதி

ஜனாதிபதி ஜயவர்த்தன கடந்த வாரம் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தியிருந்தார்

அந்த மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

செய்தியாளர் மாநாட்டின் முடிவில் திரு ஜயவர்த்தன சொன்னதாவது:

அயர்லாந்து, பஞ்சாப் பாரீஸ் எல்லா இடங்களிலும் வன்செயல்கள் நடைபெறுகின்றன

பிழை பிடிப்பதில் மட்டும் நாம் அக்கறை செலுத்தக்கூடாது

வடக்கு—கிழக்குமாகாணங்களில் நிலவும் பிரச்சினைகளினால் தான் இந்த மாகாணசபைத் திட்டம் கொண்டு வரப்படுவதாக எவரும் கருதிவிடக்கூடாது.

மாகாண சபைமூலம் அதிகாரப் பரவலாக்கல் முறை 100ஆண்டுகளாக சொல்லப்பட்டுவந்த ஒரு விடயம்.

1926இல் ஒக்ஸ்போர்ட்டில் படிப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய திரு. எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்கா பிரதேச சுயாட்சி பற்றிச் சொன்னார்.

நாம் பட்டதாரி மாணவனாக இருந்தேன். பண்டாவின் பேச்சில் நான் மயங்கிவிட்டேன்.

இனரீதியானசிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு பரிகாரமாக பிரதேச சுயாட்சியை அவர் வலியுறுத்தினார்.

சமஷ்டி அரசமைப்புத் திட்டம்பற்றிக்கூட அவர் பேசினார்.

திரு பண்டாரநாயக்கா ஒரு தீர்க்கதரிசி என்றே சொல்ல வேண்டும்

திரு பண்டாரநாயக்கா பின்னர் பிரதேச சபைத் திட்டத்தைத் தயாரித்தார். வர்த்தமானியில் வெளியிட்டார்.

வடக்கு-கிழக்கு இணைப்புப்பற்றி அதில் கூறப்பட்டதால் நாம் எதிர்த்தோம்.

உலகில் சமஷ்டி, ஒற்றையாட்சி அரசமைப்பு முறைகள் உண்டு

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து ஆகியன சமஷ்டி அரசமைப்பு நாடுகள்.

பிரிட்டன், பிரான்ஸ், இலங்கை ஆகியன ஒற்றையாட்சி அரசமைப்பு நாடுகள்.

எமது திட்டத்தின்படி 9 மாகாணங்களிலும் மாகாண சபைகள் நிறுவப்படும். மாகாண எல்லைகளை நேரம் வரும் போது மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.

ஒன்றைக் கவனிக்க வேண்டும். நாட்டின் நாம் ஒருவரை ஒருவர் நம்பவேண்டும் தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் எல்லோருக்கும் இந்த நாட்டின் உரிமை உண்டு.

நாட்டில் புராதனசரித்திரச் சிறப்புமிக்க இடங்கள் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படமாட்டா.

சட்டம்—ஒழுங்கு பராமரிப்பு மாகாண முதலமைச்சரிடம் இருக்கும்.

இந்த விஷயத்தில் அரசியல் தலையீடுகள் இருக்க மாட்டா என்று நம்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி



குறள்:

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்

பொருள்:

பயனில்லாத சொற்களை நல்ல பண்பு உடையவர் சொல்லுவாரானால், [illegible] மேம்பாடு அவர்க்குரிய மதிப்போடு நீங்கி விடும்.

ஞானக்கதிர்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் ஞானக்கதிர் தவிர்க்க முடியாத காரணங்களால் இன்று வெளிவரவில்லை.

ரெலிபோன் ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்.
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 24791, 24836

உதயன்
04 07 — 1986 வெள்ளிக்கிழமை

வெளிநாட்டுப் பிரயாணம்
- துரித ஒழுங்குகள்
- சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
- Confirmations, Re-confirmations
- பாஸ்போட், விசா, பொன்ட்
நம்பிக்கையைப் பெற்றவர்கள்
Mack Communications & Travels
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

பூண்டுலோயாவில் மோதல்

வீடுகள், கடைகள் எரிப்பு

கொழும்பு, ஜூலை 4 மலையகத்தில் பூண்டுலோயாப் பகுதியில் தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்கும் சிங்களவருக்கும் இடையே நேற்று காலை மோதல் ஏற்பட்டது.

சிலர் இச் சம்பவத்தில் காயமடைந்தனர். எவ்வளவு பேர் காயமடைந்தனர் என்பது பற்றிய தகவல் எதையும் தெரிவிக்க பொலிஸார் மறுத்துவிட்டார்கள்.

இரு தரப்பினருக்கும் காலையில் ஏற்பட்ட சண்டையே பின்னர் பெரிய குழப்பமாக மாறியதாம்.

வீடுகள் எரிக்கப்பட்டன. 4 கடைகளும் எரிக்கப்பட்டன.

தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு வெளியார் வராமல் வீதித் தடை போட்டு மறித்தனர். அது போன்று சிங்களவரும் செய்தனர்.

ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், சிப்பாய்களும் அந்த இடத்துக்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். (இ-எ)

அதிகார பரவ,.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோம்.

மாகாண அமைச்சர்களும் அதற்கு இடம் கொடாமல் நடந்து கொள்ள வேண்டும்.

மாகாண பொலிஸாரின் நடவடிக்கைகளை பிரதி பொலிஸ் மாஅதிபர்தான் கட்டுப்படுத்துவார்.

தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் படையினரை முகாம்களுக்குள் வைத்திருப்பதுபற்றி நாம் ஆலோசிப்போம்.

தற்போதைய வன்செயல்களினால்தான் படையினர் முகாம்களை விட்டு வெளியே வருகின்றார்கள்.

சிங்களவர்கள் யாழ்ப்பாணம் போய் குடியிருக்க மாட்டார்கள். தேசிய இனவிகிதாசாரப்படியே குடியேற்றத்திட்டங்கள் அமையும்.

மாகாணசபைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்தியா முழு ஒத்துழைப்பையும் தரும் என்று நம்புகின்றேன்.

எமது மாகாண சபை யோசனைகளுக்கு அறிவுபூர்வமாக ஜனநாயகரீதியான ஆதரவு கிடைக்கும் என்று எதிர் பார்க்கின்றேன்.

வடபகுதியில் நடைபெறும் சம்பவங்களை பத்திரிகைகள் பெரிதுபடுத்தக்கூடாது. மக்களின் உணர்ச்சிகளை கிளறிவிடக்கூடாது. இந்த சாபக்கேட்டில் இருந்து விடுதலைபெற அனைவரும் தங்களால் இயன்றதைச் செய்ய வேண்டும்.

நல்லது நடக்கும் என்று நம்பிக்கை கொண்டவன் நான்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

பாஷாபிவிருத்தி சங்க தேர்வு முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4 யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்திய தேர்வுகளில் சித்தியடைந்தோர் விவரம்:

பண்டிதர் தேர்வு; ஒருவரும் சித்தியடையவில்லை.

பாலபண்டிதர் தேர்வு; மூன்றும் பிரிவு; வாசுகி தங்கவடிவேல், கமலராணி திருமலைசாமி சர்மா.

பிரவேச பண்டிதர் தேர்வு; இரண்டாம் பிரிவு: வா சடாட்சரம்.

மூன்றும் பிரிவு; ஜெயந்தி சுப்பிரமணியம், ஸ்ரீமாலா சின்னத்தம்பி, சூரியகுமாரி கதிரவேலு, செ. சிவலிங்கராசா.

எதிர்வரும் பரீட்சை 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் (இ)

மாணவர் அவை நிதி சேகரிப்பு பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை4 ...டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நடத்தப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் அவையின் நிதிசேகரிப்பு முடிவடைந்துவிட்டது.

இப்படி மாணவர் அவை அறிவித்துள்ளது.

நிவாரண வேலைகளின் முதற்கட்ட வேலைகள் ஆரம்பித்துள்ளன. வாக்களிக்கப்பட்டு கைவிடப்படாத பணத்தைத் தவிர 2லட்சத்து 75ஆயிரத்து 148 ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான நிவாரணவேலைகளுக்கு உதவ விரும்புவோர் அல்லது தொடர்பு கொள்ள விரும்புவோர் 'அகதிகள் புனர்வாழ்வுக்குழு, யாழ் பல்கலைக்கழகம்' என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்—

இப்படி மாணவர் அவையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

நன்றி கூறல்

எங்கள் ஸ்தாபனத்திற்கு லொறியில் கொழும்பில் இருந்து யாழ் நகருக்கு வந்து கொண்டிருக்கையில் விஸ்வமடு றெட்பானா அருகாமையில்கடத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட விவகாரம் சம்பந்தமாக யாழ்.வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கு ஒத்துழைப்பு நல்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும் இவ்விடயத்தில் பத்திரிகை மூலம் அறிக்கைவிட்ட அமைப்புகளுக்கும் எங்களது நன்றிகடனைசெலுத்திக் கொள்கிறோம். உங்களது உதவி மேலும் நல்கட்டும்

இங்ஙனம்
S.V.முருகேசு
உரிமையாளரும்,
SVM ஸ்தாபன ஊழியர்களும்.

வேலணையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4 தீவுப்பகுதி எழுத்தாளர் சங்க கருத்தரங்கு நாளை 5 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் தலைவர் திரு. இல்லைச்செல்வன் தலைமையில் நடைபெறும். (இ)

ஜூன் 9க்கு பின் முல்லைத்தீவு வந்த

300 குடும்பங்களுக்கு நிவாரண உதவி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 4 ஜூன் 9க்குப் பின்னர் இடம்பெயர்ந்த முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அகதிகளாக வந்தோருக்கு நிவாரணம் வழங்கக்கூடாது என்று சம்பந்தப்பட்ட அமைச்சு உத்தரவிட்டுள்ளது இதனால் கடந்த மாதம் திருகோணமலை நகர்ப் புறங்களில் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்துள்ள சுமார் 300 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளன.

இதனிடையில், திரியாய் இடம் பெயர்ந்தோர் சங்கத்தின் முறையீட்டைத் தொடர்ந்து, நிவாரண உதவிகள் இன்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் கஷ்டப்படும் தமிழ அகதிகளின் நிலை பற்றி முல்லைத்தீவு பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் நேற்று தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக நிர்வாகிகளைச் சந்தித்து முறையிட்டனர்.

ஒரு வாரத்தினுள் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்வதாக புனர்வாழ்வுக் கழக குழுப்பினர்கள் உறுதி அளித்தனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் திருமலை மாவட்டத்தில் திரியாய் மற்றும் கிராமப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 1050 தமிழ்க் குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கியுள்ளன.

தங்கள் நலன்களைக் கவனிப்பதற்காக 'திரியாய் இடம்பெயர்ந்தோர் சங்கம்' ஒன்றை அவர்கள் அமைத்துச் செயற்பட்டு வருகின்றனர்.

அதே சமயம் அகதிகள் நிவாரணம் சம்பந்தமான மாநாடு ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது (இ-எ)

சிவபூதவரர் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 4 கோண்டாவில் வடக்கு அன்னுங்கை சிவபூதவராயர் திருக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

ஜூலை 12 இல் தேர்த் திருவிழாவும் ஜூலை 13 இல் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-எ)

கிளிநொச்சி அதிபர்களுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4 கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்களை உடைய பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை நடத்த விரும்பினால் டீமா மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக அமைந்துள்ள கல்வித்திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் எம். மன்சூர் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

இளம்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கிழமை கல்லூரிக்கு வந்து பிற்பகல் 2 30 மணி அளவில் வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கும் வேளையில் அரச பயங்கரவாத கூலிப் படையினரால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டமையை மாணவ சமுதாயமாகிய நாங்கள் பலமாகக் கண்டிக்கிறோம்.

சுதந்திரமான காற்றைச் சுவாசித்துக் கொண்டு கல்வி கற்க முடியாத நாங்கள், கல்விக்கூடங்களுக்கு வந்து போகும் ஒவ்வொருநாட்களிலும் எங்கள் மரணமும் பின்தொடர்ந்து வருவதைத் தொடர்ந்து அஞ்சி அஞ்சி புத்தகங்களின் ஏடுகளுக்குள் தஞ்சம் புகுகின்றோம்.

நாங்கள் கல்வி கற்கும் கல்லூரிகளும், பாடசாலைகளும் இராணுவ முகாம்களாக்கப் பட்டு வருவதற்கும் எங்கள் கல்விச் சூழல்கள் எமக்கு அந்நியமாக்கப்பட்டு வருவதற்கும் உலக மாணவ சமுதாயத்தின் ஒரே குரலில் நமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். (இ-7)

பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 4 சுந்தரோடை ஒட்டன் கட்டு ஞானவைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 00 மணி அளவில் நடைபெறும்.

வைரவப் பெருமானுக்கு விசேஷ ஆராதனை நடைபெற்ற பின்பு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

ஈழ நல்லூர் வானொலி புகழ் அருணா இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது (இ)

புளொட் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 4 கோப்பாய் வெளியில் ஜூன் 30 இல் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் உயிரிழந்த போராளி பார்த்திபனுக்கு (பண்டத்தரிப்பு) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வீர அஞ்சலி தெரிவித்து அறிக்கை வெளியிட்டது.

29-3 86-இல் கடற் படையினருடன் மோதி உயிரிழந்த போராளிகள் சின்னத்துரை இராமலிங்கம் (தொண்டமனாறு), செல்வரட்ணம் செல்வகுமார் (தாவடி) ஆகியோருக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் அஞ்சலி தெரிவித்துள்ளது (இ-எ)

யாழ் நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீதி வழியாக யாழ் கல்வித் திணைக்களத்தைச் சென்றடைந்தது.

மாணவர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று கல்விக் கந்தோரில் கையளிக்கப்பட்டது கல்விப் பணிப்பாளரின் சார்பில் திணைக்கள உயர் அதிகாரி திரு. இராமலிங்கம் மகஜரைப் பெற்றுக் கொண்டார். (இ-7)

மா, சீனி கப்பல்

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு மேலும் ஒரு சீனிக் கப்பலும், மாக்கப்பலும் வந்து சேர்ந்தன. (இ-68)

புனித மரியாள் கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 4 யாழ் புனித மரியாள் வித்தியாலய கல்விப் பொருட்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு கா மாணிக்கவாசகரும் சிறப்பு விருந்தினராக யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தனும் கலந்து கொள்கிறார்கள். (இ)

பெரியபுலம் வித்தியாலயத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 4 யாழ் பெரியபுலம் மகா வித்தியாலய கல்விப் பொருட்காட்சி நாளை 5 ஆம் திகதி நடைபெறும்

பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம் பொருட்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

சிறப்பு விருந்தினராக சு சிவநாயகமூர்த்தி கலந்துகொள்வார். (இ-5)

ஒஸ்மானியாவில்

யாழ்ப்பாணம், ஜூலை 4 யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை கல்விக் கண்காட்சி நடைபெறுகிறது.

காலை 9.00 மணிக்கு கண்காட்சியை, கல்வி அதிகாரி திரு இ சிவானந்தன் ஆரம்பித்து வைப்பார். (இ)

மன்னாரில்..

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அகதிகளாம்.

கொழும்பின் உள்ள அரசு வட்டாரங்கள் இந்தியத் தூதரகத்துக்கு அனுப்பிய கடிதம்ஒன்றில் இச்சம்பவத்துக்காக வருத்தம் தெரிவித்துள்ளது என்று தெரியவருகிறது.

இத்தகவல் பற்றி இந்தியத் தூதரக அதிகாரிகள் இப்படி ஒரு கடிதம் கிடைத்தது பற்றி ஊர்ஜிதம் செய்யவோ, மறுப்பு தெரிவிக்கவோ மறுத்து விட்டனராம். (இ-எ)

அரச அதிபரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் திருமலைக் கச்சேரியில் நடந்த சமாதானச் சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அரசாங்க அதிபர் திரு ஆரியரத்தினாவே வெளியிட்டார். (இ-எ-150)

விளையாட்டரங்கு

17 வயது பிரிவு

சென். பற்றிக்ஸ் அணி இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 4 தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி அணியை சென். பற்றிக்ஸ் அணி இன்னிங்ஸால் வென்றது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 17 வயது பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாகவே இது நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

கணேஷ்குமார் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

சி ஆர்.ஜெயவேந்திரா, வி. ஆர் திலகராஜா ஆகியோர் முறையே 5, 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது

ஜி எஸ் சவரிமுத்து 47 ஓட்டங்களையும் ஏ எம் நிமல்ராஜ், சி ஆர். ஜெயவேந்திரா, ஆர் பி சவுந்தரநாயகம் ஆகியோர் முறையே 27, 26, 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே குமார் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்

இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மகாஜனா அணி ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது

கணேஷ்குமார் சிறப்பாக ஆடி 28 ஓட்டங்களைப் பெற்றார்.

ஜி எஸ். சவரிமுத்து, ஏ என். ஆனந்தராஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

சென். பற்றிக்ஸ் அணி கலந்து கொண்ட ஆட்டங்கள் எதிலுமே தோல்வி அடையாதது குறிப்பிடத்தக்கது. (இ-7)

மென்பந்து கிரிக்கெட்

சில்வர் ஸ்ரார்ஸ் சுற்றுக் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4 சில்வர் ஸ்ரார்ஸ் சுற்றுக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன

இப்போட்டிகளில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றஇரு ஆட்டங்களில் காரைநகர் கோவளம் அணியும், அரியாலை ஒஸ்ரின் அணியும் வெற்றி பெற்றன.

இந்த அணிகள் முறையே யாழ் யூனியன் ஜொனியன்ஸ் அணியையும் தம்பசிட்டி உதயதாரகை அணியையும் தோற்கடித்தன.

எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற இருந்த இச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் யாவும் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளன. (இ-7)

அரசமைப்புச் சட்ட...

சந்தித்தபோது இக்கோரிக்கைகளை வற்புறுத்தினர்.

பிரஸ்தாப கோரிக்கைகளை ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனா சாதகமான முறையில் கேட்டுக்கொண்டதாகஅமைச்சர் தொண்டமான், சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

இதேவேளை —

எப்படியாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாகவேண்டும் என்பதில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா பகிரதப்பிரயத்தனம் எடுத்து வருகிறார்—

அதன் ஒரு கட்டமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழர் அமைப்புக்களையும் பேச்சுக்களில் பங்குபற்ற வைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய முறையில் நிலைமை முன்னேற்றம் கண்டுள்ளது-

ஜனாதிபதி தமது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காகவும் இரண்டு சட்டங்களையும் இடைநிறுத்தஞ் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது - என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன (அ-எ)

சுதந்திரக்கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அரசியல் கட்சிகள் மாநாட்டின் தொடக்க நாளில் திரு எஸ். டபிள்யு. ஆர்- டி. பண்டாரநாயக்கா பற்றி ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் பிழையானவை. அவற்றைத் திருத்தியும் விளக்கியும் அறிக்கை ஒன்றை கட்சி வெளியிடும்.

இப்படி அரசியல் குழு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மகாநாயக்கர் கருத்து

அதே நேரத்தில் மாகாண சபை யோசனைகள் தீர்வு காணும் அடிப்படையில் அமையவில்லை என்று அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த தேரர் கூறியிருக்கிறார்.

மாகாண சபைகள் யோசனையை ஆராயும் மகாசங்கத்தினரின் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை ஏழாம் திகதி நடைபெற உள்ளது.

அந்தக் கூட்டத்தின் பின்னர்தான் சுதந்திரக் கட்சியும், மகாசங்கமும் தங்கள் நிலைப்பாட்டை வெளியிடும்

இரண்டும் சேர்ந்து எடுக்கும் பொது நிலைப்பாடாக அது அமையும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன (இ-எ-2)

மாதகலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாதகல் கடற்பகுதியில் ஐந்து பேருடன் வள்ளம் ஒன்று வந்துகொண்டிருந்தது. இதனைக் கண்ட கடற் படையினர் வள்ளத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்து அதிவேகமாகச் சென்ற அந்த வள்ளத்தைத் துரத்திச் சென்ற கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் மூன்றுபேர் கொல்லப்பட்டனர். என்று தெரியவருகிறது. ஏனையோர் பற்றி தகவல் அறிய முடியவில்லை. இந்தப் படகில் கடத்தல் பொருள்கள் கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (இ-10)

யுத்த நிறுத்தம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தனியே சந்தித்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ அஸீஸ், இலங்கை மக்கள் கட்சித்தலைவர் விஜய குமாரணதுங்கா ஆகியோரும் இக்கோரிக்கையையே வற்புறுத்தினர்.

அமைச்சர் தொண்டமான் இரண்டுமணி நேரம் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அச்சமயம் திரு. தொண்டமான் யோசனைகள் சம்பந்தமான சில விளக்கங்களை ஜனாதிபதியிடம் கேட்டறிந்து கொண்டார்.

அந்த விளக்கங்கள் என்ன என்பது பற்றி திரு தொண்டமான் தகவல் வெளியிட மறுத்து விட்டார்.

ஆனால் தமிழ்க் குழுக்களைச் சந்தித்துப் பேச வேண்டிய அவசியம் பற்றி தான் ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னதாகத் திரு. தொண்டமான் சொன்னார். (இ-எ-2)

குமார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து திரு குமார் பொன்னம்பலம், ஜனாதிபதியிடம் மேலதிக விளக்கங்கள் கேட்டார்.

காணி அபிவிருத்தி, குடியேற்றத்திட்ட அதிகாரங்கள் பற்றி அமைச்சர் காமினி திஸநாயக்காவுடன் பேச்சுக்கள் நடத்தும்படி ஜனாதிபதி. திரு குமார் பொன்னம்பலத்திடம் தெரிவித்தார். (இ-எ-2)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 04—07—1986
published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Srilanka under number Q [illegible] N86